
## திராவிடத்தால் வாழ்கிறோம்

913

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

ர.பிரகாசு

74

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## விவாதமான சமதர்ம வேலைத்திட்டம்!

1932-ஆம் ஆண்டு ரஷ்யப் பயணம் மேற்கொண்டு வந்தபிறகு, பெரியாரிடம் பொதுவுடைமைச் சிந்தனைகள் மேலோங்கிக் காணப்பட்டன. அதன் பிறகுதான் அனைவரையும் 'தோழர்' என அழைக்கத் தொடங்கினார். 1933-ஆம் ஆண்டின் 'குடி அரசு' இதழ்கள் இந்த மாற்றத்தைத் துல்லியமாக வெளிப்படுத்துகின்றன. அந்த காலகட்டத்தில்தான், 'மதுரை ஜில்லா முதலாவது சுயமரியாதை மாநாடு' நடைபெற்றது.

16.01.1933 அன்று விக்டோரியா எட்வர்டு மண்டபத்தில், பேராசிரியர் லட்சுமி நரசு தலைமையில் இம்மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்கு மதுரை, ராமநாதபுரம் பகுதிகளில் இருந்து பரவலாக வருகை தந்திருந்தனர். குறிப்பாக, விருதுநகர், அருப்புக்கோட்டை பகுதிகளில் இருந்து பெண்கள் அதிக அளவில் வந்திருந்தனர். தொடக்கத்தில், எஸ்.தியாகராஜன் வரவேற்புரை வாசித்தார்.

அதன் பின் மாநாட்டிற்குத் தலைமை ஏற்ற பேராசிரியர் லட்சுமி நரசு, ஆங்கிலத்தில் தலைமை உரையை வாசித்தார். வழக்குரைஞர் முகமது சுல்தான் தமிழில் மொழிபெயர்த்தார்.

"சீன தேசத்தில் பெண்கள் போலீஸ் படையில் சேர்ந்து அரசாங்கத்தையே நடத்தும் வீர மங்கையராய் விளங்கும்போது,




ஓவியம் : சிகரன்

நம் நாட்டில் சகோதரிகள் கல்வி வாசனையின்றி, பகுத்தறிவின்றி, சுயநல ஆண்கள் காட்டும் வழியையும், புராண ஆபாசக் கதைகளையுமே கட்டளைகளாக மதித்து, அடுப்பங்கரையில் அடைபட்டு கிடந்து, அடுப்பூதும் பெண்டீர்களாய் வாழ்ந்து வருகின்றனர்" என்றார் அவர். சுயமரியாதை, சுதந்திரம், பெண்ணுரிமை, வேலைவாய்ப்பு என பல கருத்துகளை உள்ளடக்கியிருந்தது அவரது பேச்சு.

அதன் பிறகு, சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் சார்பில், பெரியாருக்கு வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது. தொடர்ந்து, சு.ப.சு.விசாலாட்சி 'வாலிபர் கடமை' என்ற தலைப்பில் உரையாற்றினார். இவர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப. வீரபாண்டியனின் தாயார் ஆவார். விசாலாட்சி பேசிய பிறகு, சுயமரியாதை இயக்கம் குறித்து பொன்னம்பலனார் உரையாற்றினார்.

பின்னர் மதிய உணவுக்காக மாநாடு ஒத்திவைக்கப்பட்டது. போடிநாயக்கனூர் ஜமீன்தார் பங்களாவில் தீர்மான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மீண்டும் மாலை 3 மணிக்கு மாநாடு கூடியவுடன், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விருதுநகரில் நடைபெற்ற 3-வது சுயமரியாதை மாநாட்டின் தீர்மானங்களை அப்படியே ஏற்றுக் கொள்வது என முடிவு செய்யப்பட்டது. மேலும், சுயமரியாதை இயக்கத்தை அகில இந்திய அளவில் பிரபலப்படுத்தும் வகையில், ஆங்கிலத்தில் ஓர் இதழ் தொடங்க வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1932-இல் ஈரோட்டில், 'சமதர்ம வேலைத்திட்டம்' ஒன்றை பெரியார் உருவாக்கினார். அதுகுறித்து, இம்மாநாட்டில் நடந்த விவாதத்தை 'குடி அரசு' இதழில், பெரியார் பதிவு செய்துள்ளார். "ஈரோடு வேலைத்திட்டம் பற்றி முடிவெடுக்கும் உரிமை மாகாண கமிட்டிக்கு விடப்பட்டது. சில விஷயங்கள் சட்ட விரோதமாக இருக்குமோ என்ற அச்சம் சிலருக்கு இருந்தது. ஆனால், சமதர்ம கட்சி வேலைத்திட்டம் பற்றிய அபிப்ராயத்தில் எவ்வித மாறுபாடும் யாருக்கும் இல்லை. எனினும், இது சுயமரியாதை இயக்கத் திட்டமாகவே இருக்கலாம், இதற்காகத் தனிக்கட்சி தேவையில்லை என்று கருதினர் சிலர். சிலருக்கு இதில் திருப்தி இல்லை என்றாலும், ஒரு விதத்தில் ஒப்புக் கொண்டார்கள்" என எழுதினார்.

தீர்மானங்களுக்குப் பின்னர், 'பெண் கல்வி' என்ற தலைப்பில் விசாலாட்சி மீண்டும் உரையாற்றினார். சுயமரியாதை சங்கத்தின் 1931-32-ஆம் ஆண்டின் நிர்வாக அறிக்கையை, ஏ.என்.வெங்கிடசாமி தாக்கல் செய்ததுடன் மாநாடு நிறைவுற்றது.

**...கூட்டம் திரளும்**

## மறைக்கப்பட்ட கொலைக்குற்றமும் உறுத்தாத மனசாட்சியும்!

நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய கருத்துகள், நீதித்துறை மாண்பையே கேள்விக்கு உள்ளாக்கி இருக்கிறது என சமூக வலைதளங்களில் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இது தொடர்பாக பத்திரிகையாளர் பாரதிதம்பி சமூக வலைதளத்தில் எழுதியுள்ள பதிவு.

"ஜி.ஆர்.சாமிநாதனுக்கு வேண்டிய ஒரு சாஸ்திரிகளின் தங்கை அமெரிக்காவிலிருந்து வந்திருந்தாராம். அவர் கார் ஓட்டியபோது, ஒரு நபர் மீது மோதி அவர் இறந்து விட்டாராம். அந்த தங்கை ஒரு வாரத்தில் அமெரிக்காவுக்குத் திரும்ப வேண்டி இருந்ததால், அந்த சாஸ்திரிகள் பழியை தன் மீது ஏற்றுக் கொண்டு காவல் நிலையத்தில் சரணடைந்தாராம். நீதிமன்றம் அவருக்கு 18 மாதங்கள் சிறை தண்டனை வழங்கி விட்டதாம்.

இந்த விஷயத்தைச் சொல்லும் ஜி.ஆர்.சுவாமிநாதன், 'அந்த சாஸ்திரிகள் குடுமி வைத்திருந்தார், அதனால்தான் இவ்வளவு அதிக கால தண்டனை' என்று கொந்தளிக்கிறார். அதாவது அந்த விபத்து வழக்கின் நீதிபதி ஒரு பார்ப்பனரல்லாதோர் என்பதால், பார்ப்பனரான தன் நண்பர் சாஸ்திரிகள் மீது உள்நோக்கத்துடன் தீர்ப்பு சொன்னதாகப் பேசுகிறார். தன்னைப்போலதான் அனைவரும் என நினைத்து விட்டார்போல... அதன் பிறகு சாமிநாதன் தலையிட்டு, மேல்முறையீடு செய்து அங்கு தனக்கு வேண்டிய நீதிபதி மூலம் தண்டனைக் காலத்தைக் குறைத்து தீர்ப்பு வாங்கியுள்ளனர். இதை பெருமையாக மேடையில் அவரே சொல்கிறார்.

உண்மையில் இவரது நண்பரான அந்த சனாதன ஃபாலோயர், பொய் சொல்லி இருக்கிறார். தன் தங்கைதான் காரை விட்டு மோதியவர் என்ற உண்மையை மறைத்து, தான் மோதியதாக பொய் சொல்லி இருக்கிறார். அதுவே முதலில் சட்டப்படி தவறு. சரி, இவர்களுடைய சனாதன தர்மம் பொய் சொல்வதற்கு லைசன்ஸ் தருகிறது என்று எடுத்துக் கொண்டாலும், உண்மையில் அந்த நபரை காரை விட்டு மோதி கொலை செய்த அந்த சாஸ்திரிகளின் தங்கை அமெரிக்காவில் இருக்கிறார் இல்லையா... அவரை வர வைத்து ஒப்படைத்திருக்க வேண்டும். அவர் மீது வழக்குப் பதிவு செய்திருக்க வேண்டும். ஏன் செய்யவில்லை? ஒரு வழக்கின் குற்றவாளி இன்னார்தான் என தெரிந்தும், ஏன் கண்டுகொள்ளவில்லை? இதுதான் நீங்கள் வேதம் காக்கும் லட்சணமா? ரோட்டில் போகும் யாரோ ஒரு வழிபோக்கனை கார் ஏற்றிக் கொன்றுவிட்டு, அமெரிக்காவில் போய் ஒளிந்து கொள்ளும் ஒரு நபருக்கு தெரிந்தே உதவி செய்திருக்கிறார் இந்த சாமிநாதன்" என்கிறது அவரது பதிவு.

## ஃப்ளாஷ்பேக்



### நெஞ்சில் நிறைந்த சந்திப்பு!



உதய நாராயணன்

2005-இல் புதுச்சேரியில் 'தினகரன்' செய்தியாளராகப் பணியாற்றி வந்தேன். அந்த ஆண்டு புதுச்சேரி வருகை தந்த, அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளரும் இன்றைய முதலமைச்சருமான, கழகத் தலைவர் அவர்களை, அவர் தங்கியிருந்த விடுதிக்குச் சென்று, சந்தித்து உரையாடினேன். பத்திரிகையாளர்களுக்கு எப்போதும் பெரு மதிப்பளிக்கும் தமிழக முதலமைச்சர் அவர்கள், "செய்திகள் எல்லாம் சிறப்பாக வெளியிடுகிறீர்கள்" என்று பாராட்டினார். அந்த சந்திப்பு, நெஞ்சில் நீக்கமற நிறைந்துள்ளது..

**– உதய நாராயணன், நிறுவனர், ஆசிரியர் 'நமது முரசு' நாளிதழ்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்


74

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## இலட்சிய முழக்கம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 'ஓரணியில் தமிழ்நாடு' முன்னெடுப்பின் மூலம் இதுவரை 2 கோடிக்கும் அதிகமானோர் உறுப்பினர்களாகத் தங்களைப் பதிவு செய்துள்ளனர். பல்வேறு தடைகளைத் தாண்டி, கழக உடன் பிறப்புகளின் உழைப்பை மூலதனமாகக் கொண்டு வெற்றிகரமாக தொடர்ந்து கொண்டிருக்கிறது 'ஓரணியில் தமிழ்நாடு'. அதைப் போலவே கழக இளைஞர் அணி வட்டம்-கிளை-பாகம் வரை நிர்வாகிகளை நியமித்து, இயக்கத்திற்குப் புது ரத்தம் பாய்ச்சி அமைப்பை மேலும் வலுப்படுத்தும் முயற்சியில் இறங்கியிருக்கிறது.

இந்த நேரத்தில் 1992-ஆம் ஆண்டு 6-வது முறையாக கழகத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், கழகப் பொதுக் குழுவில் கழகத்தின் அமைப்பு வலிமை குறித்தும் கொள்கைப் பிடிப்பு குறித்தும் மனம் திறந்து ஆற்றிய உரை 'கண்ணீர், வியர்வை, இரத்தம்' என்ற தலைப்பில் நூலாக்கம் பெற்றுள்ளது. படிக்கும்போதே உணர்வு உந்துதலை ஏற்படுத்தும் இந்த நூலை தலைமைக் கழகம் வெளியிட்டுள்ளது. தமிழிணையம்-மின்னூலகத்தில் வாசிக்கக் கிடைக்கிறது.




'தடா' என்ற கடுமையான சட்டத்தின் கீழ், கழக உடன் பிறப்புகள் கைது செய்யப்பட்டு, கழகத்தின் தலைவரே கைது செய்யப்படுவார், தி.மு.கழகமே தடை செய்யப்படும் என்ற அச்சமும் பரபரப்பும் தமிழ்நாட்டைச் சூழ்ந்திருந்தது. அப்போதும், தி.மு.கழகம் தனது ஒன்பதாவது உள்கட்சித் தேர்தலை, கிளைக் கழகம் தொடங்கி தலைமைக் கழகம் வரை நடத்தி முடித்தது, அதைத் தொடர்ந்து கூடிய பொதுக்குழுவில் கழகத் தலைவர் ஆற்றிய இந்தப் பேருரை கழகத்தின் கொள்கைப் பிரகடனமாகத் திகழ்ந்ததென்றால் அது மிகையல்ல.

"சோதனைகளையெல்லாம் சாதனைகளாக ஆக்கிக் கொள்ளும் சக்தி வாய்ந்த மாபெரும் இயக்கம் தி.மு.க." என்று அந்த உரையைப் பேசத் தொடங்கிய கலைஞர், உட்கட்சிப் பிரச்சினை- எதிர்க்கட்சிகளின் சூழ்ச்சி- கொள்கைத் தெளிவுடன் இருக்க வேண்டியதன் அவசியம்- தலைமைக் கழக நிர்வாகிகள் தனக்கு வழங்கி வரும் ஒத்துழைப்பு என பல்வேறு பொருள் குறித்து, தெளிவாகவும் வெளிப்படையாகவும் அவர் பேசினார்.

'முரசொலி' சந்திக்கும் இழப்புகளை ஈடுசெய்ய, 'தமிழன்' என்ற ஒரு வெகுஜன இதழை, தான் தொடங்க எத்தனித்த போது, அது சந்தித்த புறக்கணிப்புகளை எல்லாம் அவர் எடுத்துக்கூறியதுடன், தமிழை, தமிழ் இனத்தை, தமிழ்நாட்டை வாழ வைக்கின்ற கடமை, தமிழ்நாட்டிலே தி.மு.கழகத்திற்கு உண்டு என்கின்ற உணர்வை உடன் பிறப்புகள் பெற வேண்டும் எனவும் அவ்வுணர்வு வளர அனைவரும் பணியாற்ற வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இதற்கெல்லாம் முத்தாய்ப்பாக "எனக்குத் தேவை உங்களுடைய கண்ணீர், வியர்வை, இரத்தம்!" என்று முழங்கியதுடன், இவை எல்லாம் அண்ணாவின் கொள்கைகளைக் காப்பாற்றவும், தி.மு.கழகம் என்ற பேரியக்கத்தைக் காக்கவும், அதன் லட்சியங்களைக் காப்பாற்றவும் அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான் இவை மூன்றையும் அவர் கேட்பதாகக் கூறி இருக்கிறார்.

இன்றைக்கு அமைப்பு ரீதியாக கழகம் வலுப்பெற்றுள்ள நிலையில், ஒவ்வொரு உடன் பிறப்பும் ஊக்கம்பெற்று, களப்பணியாற்ற உந்துசக்தியாக இந்நூல் திகழும்!

**...வாசிப்போம்.**

**நூலை வாசிக்க :**

## நம் வரலாறு

### முதல் வேட்பாளர்கள்

1957-ஆம் ஆண்டு தேர்தலின்போது தி.மு.க. வேட்பாளர்கள் 124 பேர் சட்டமன்றத் தேர்தலுக்கும் 11 பேர் நாடாளுமன்றத் தேர்தலுக்கும் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டனர். தவிர, சட்டமன்றத் தேர்தலில் 7 பேருக்கும், நாடாளுமன்றத் தேர்தலில் 5 பேருக்கும் தி.மு.க. ஆதரவளித்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131